இணைப்பு 02

| அலுவலக பாவனைக்காக | |
|---|---|
| ஒப்பந்தபடிவ இல | |

# <u>வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டத்தினை செயற்படுத்தும்போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு பயனாளிக்குமிடையில் செய்து கொள்ளப்படுகின்ற ஒப்பந்தம்.</u>

இங்கு முதலாம் தரப்பினர் எனக் கருதப்படுகின்ற இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2013 ஆம் ஆண்டினது 01 ஆம் இலக்கத்தின் மூலம் தாபிக்கப்பட்ட 4ஆம் மாடி செத்சிரிபாய பத்தரமுல்ல என்ற இடத்தில் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி / மாவட்ட மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருட்டு............................... மாவட்டத்தின் ......................................... பிரதேச செயலக அதிகார பிரதேசத்தின் வாழ்வின் எழுச்சி தலைமையக முகாமையாளர் ஒரு பிரிவினராகவும்,

அவ்வதிகாரப் பிரதேசத்தில் இங்கு இரண்டாவது தரப்பினர் என்று அழைக்கப்படும் ............................................................. (நிரந்தர முகவரி) இல் வதியும் வாழ்வின் எழுச்சி பயனாளி ஒருவரான இதன் கருத்திட்ட உரிமையாளர் ஒருவராக அழைக்கப்படுகின்ற.............................. ஆம் இலக்கத்தினை உடைய (தே.அ.அ. இலக்கம்) திரு / திருமதி செல்வி ......................................................................... (முழுப் பெயர்) என்பவர் பிறிதொரு பிரிவினராகவும் கட்டுப்பட்டு இரு தரப்பினரிதும் இணைக்கப்பாட்டுடன் ...................... ஆம் ஆண்டு................ மாதம் ............. ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும்.

மேற்சொன்ன ஒப்பந்தத்தின் நிபந்தனைகளாவன.

1. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கருத்திட்ட உரிமையாளரின் வருமானமீட்டல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு இனங்காணப்பட்ட (கருத்திட்டத்தின் பெயர்) ....................................................... இன் பொருட்டு கருத்திட்ட உரிமையாளர் பொருத்தமானவர் என்பதனால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்ட உள்ளீடுகள் / நடுகைப் பொருட்கள் கால்நடைகளை கீழ் குறிப்பிடப்படுகின்ற நிபந்தனைகளுக்குட்பட்டதாக ஒப்படைப்பதற்கு இரு தரப்பினரும் இணங்குகின்றனர்.

2. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா................................ பெறுமதியான கருத்திட்ட உள்ளீடுகளை இன்றைய தினம் கருத்திட்ட உரிமையாளருக்கு ஒப்படைத்ததாக இரு தரப்பினரும் இணங்குகின்றனர்.

3. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய வழங்கப்பட்ட கருத்திட்ட உள்ளீடுகளின் பெறுமதி தீரும் வரை இவ்வொப்பந்தம் அமுலில் இருக்கும் என்பதனை இருதரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

4. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய வழங்கப்பட்ட கருத்திட்ட உள்ளீடுகளை எவரேனும் ஒருவருக்கு வாடகைக்குவிடவோ, ஒப்படைப்பதற்கோ, வழங்குவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ போன்ற எந்தவிதத்திலும் பிறிதொருவருக்கு வழங்குவதில்லையெனவும் அவ்வாறு மேற்கொள்ள வேண்டியேற்படின் அதன் பொருட்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி / மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தினைப் பெறல் வேண்டும் என இரு தரப்பினரும் இணங்குகின்றனர்.

5. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய பெற்றுக் கொண்ட மேற்சொன்ன நன்மைகளைப் பாதுகாத்து இக்கருத்திட்டத்தின் பொருட்டு முறையாகப் பயன்படுத்துவதற்கு கருத்திட்டத்தினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு இரண்டாம் தரப்பினர் கட்டுப்படுகின்றனர்.

6. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய கருத்திட்டத்தினை செயற்படுத்தும் போது கவனயீனம் காரணமாக இக்கருத்திட்டத்திற்கு ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டால் இல்லது கருத்திட்டம் தோல்வியடைந்தால் அச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டுப் பெறுமதிக்குச் சமனான தொகையினை இரண்டாம் தரப்பினரால் முதலாம் தரப்பினருக்கு செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

7. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய கருத்திட்டத்தின் பொருட்டு வழங்கப்படுகின்ற நிதியின் கீழ் பெற்றுக் கொண்ட அல்லது வழங்கப்படுகின்ற பொருட்கள் அல்லது நிர்மாணங்கள் ஏதேனும் ஒரு காரணத்தினால் பாதிப்புக்குள்ளானால், காணாமல் போனால் உடனடியாக அது தொடர்பில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வாழ்வின் எழுச்சி தலைமையக முகாமையாளர் ஊடாக மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளருக்கு சம்பவம் நடைபெற்று 24 மணித்தியாலத்திற்குள் அறிவிப்பதாக இரு தரப்பினரும் இணங்குகின்றனர்.

8. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய கருத்திட்ட கன்காணிப்பு மற்றும் பின்பணி தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளும் அதிகாரம் உரிய பிரிவுப் பொறுப்பு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் முதல் பணிப்பாளர் தலைமையதிபதி வரையிலான வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் குறித்த ஏனைய உதவிச் சேவையினை வழங்கும் உத்தியோகத்தர்களுக்கும் உள்ளது என்பதனை இரண்டாம் தரப்பினர் ஏற்றுக்கொள்கின்றனர்.

9. இவ் வொப்பந்தத்திற்கமைய கருத்திட்டம் தொடர்பில் மேற்படி நிபந்தனைகளை தவறும் பட்சத்தில் அல்லது மீறும் பட்சத்தில் இவ்விருதரப்பினரிற்குமிடையே ஏற்படும் பிரச்சினைகள் அல்லது முரண்பாடுகளுடனான நிலைஉருவாகும் பட்சத்தில் பணிப்பாளர் தலைமையதிபதியின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும் என இருதரப்பனரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

**உப அட்டவணை**

| கருத்திட்டத்தின் பெயர் | செலவு விபரம் * | கருத்திட்டத்தின் மொத்தக் கிரயம் (ரூபா) | திணைக்கள பங்களிப்பு (ரூபா) | கருத்திட்ட உரிமையாளரின் பங்களிப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

*உபகரணங்கள் / கருத்திட்ட உள்ளீடுகள் / நடுகைப் பொருட்கள் / கால் நடைகள் தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்.

இதற்கு சாட்சியாக முதலாம் தரப்பினரின் பொருட்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்காக......................................
பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் வாழ்வின் எழுச்சி தலைமையக முகாமையாளரும் இரண்டாம் தரப்பினரின் பொருட்டு கருத்திட்ட உரிமையாளரும் ............................................... ஆம் ஆண்டு................ மாதம் ...................
ஆம் திகதி........................... இல் கையொப்பமிடப்பட்டது.

**முதலாம் தரப்பினர்:**

கையொப்பம் :.............................

தலைமையக முகாமையாளர்

பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருட்டு

(பதவிமுத்திரை)

திகதி:.........................

**இரண்டாம் தரப்பினர்:**

கையொப்பம்:..............................

கருத்திட்ட உரிமையாளர்

தே. அ.அ.இல:..............................

திகதி:.........................

**முதலாம் தரப்பின் பொருட்டு**

கையொப்பத்திற்கான சாட்சி

1. பெயர்:....................................
   கையொப்பம்:............................
   தே.அ.அ.இல:............................

2. பெயர்:....................................
   கையொப்பம்:............................
   தே.அ.அ.இல:............................

**இரண்டாம் தரப்பின் பொருட்டு**

கையொப்பத்திற்கான சாட்சி

1. பெயர்:....................................
   கையொப்பம்:............................
   தே.அ.அ.இல:............................

2. பெயர்:....................................
   கையொப்பம்:............................
   தே.அ.அ.இல:............................